# பெயர்ச்சொல் — வகைகள்

பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

## 1. பொருட்பெயர்

உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர்

எ.டு




மேலே உள்ள படங்களில் கிளி, மரம், மற்றும் சிறுமி இவற்றில் உயர்திணையாகிய சிறுமியும் மற்றும் அஃறிணையாகிய மரமும் பொருட்பெயர் தான்.

## 2. இடப்பெயர்

ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயர்.

எ.கா

சென்னை, மதுரை

- இவையன்றி ஊர்களின் பெயர்களும், நிலப்பிரிவுகளின் பெயர்களும் இடப்பெயர்கள் ஆகும்.


3. காலப்பெயர்

ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

எ.கா

காலை, மாலை

தை, மாசி



4. சினைப்பெயர்

பொருளின் உறுப்புகளைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும். சினை என்றால் உறுப்பு என்று பொருள்.

உயர்திணை மற்றும் அஃறிணைப் பொருள்களின் உறுப்புகளையும் இது குறிக்கும்.

எ.கா

கண், இலை, கிளை



5. பண்புப்பெயர்

ஒரு பொருளின் பண்பை உணர்த்தும் பெயர் பண்புப்பெயர்.

எ.கா

வெண்மை, இனிமை, வட்டம் ○ □

பண்புப்பெயர் நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்

6. தொழிற்பெயர்

ஒரு தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர். அல், தல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும்.

எ.கா

ஆடுதல்

ஓடுதல்

— இவையே பெயர்ச்சொல் வகைகள் ஆகும்.